**வட மாகாண சபை 2017**

வட மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கீழேயுள்ள 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, வட மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அரசு சார்பற்ற நிறுவனமொன்றிடமிருந்து கடைத்திருந்த ரூபா 704,000 மொத்தப் பெறுமதியுடைய 48 தளபாடங்களும் இயந்திரங்களும் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தளபாடங்களும் இயந்திரங்களும் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்புக்கள் மீதான ரூபா 31.22 மில்லியன் வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது. அதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான வருமானமும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வட்டியும் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான மாகாண நிதியக் கணக்கிலும் பேரவைச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கிலும் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதிகளிற்கிடையே ரூபா 186.21 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

01 முதல் 09 ஆண்டு காலப்பகுதியில் ஓய்வுபெற்றிருந்த, பதவிகள் வறிதாக்கப்பட்டிருந்த, பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்த, மரணித்திருந்த மற்றும் அமைச்சுக்களிற்கும் திணைக்களங்களிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த 72 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 5.34 மில்லியன் நிலுவையான பதவியணியினர் கடன் மீதிகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 கட்டுநிதிக் கணக்குகள்

2012 ஆம் ஆண்டின் போது மன்னார் மாவட்டத்தில் தீயினால் அழிவுற்ற கடைகளின் உரிமையாளர்களான வர்த்தகர்களிற்குச் இழப்பீடு செலுத்துவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் ரூபா 6 மில்லியன் கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 4.872 மில்லியன் தொகை குறித்த உள்ளூராட்சி அதிகாரசபைகளால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பொது வைப்புக் கணக்கு

மாகாண அமைச்சொன்றுடனும் 03 மாகாணத் திணைக்களங்களுடனும் தொடர்புடைய ரூபா 9.07 மில்லியன் கூட்டுத்தொகையான பிடி காசு, தனிப்பட்ட வைப்புக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத செயற்திட்ட நிதிகள் என்பன மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 2 ஆண்டுகளிற்கும் மேலாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 866.96 மில்லியன் பெறுமதியுடை சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | |
| நிலையான சொத்துக்கள் | 500.00 | தனித்தனியான நிலையான வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் மீளாயவ்ாண்டில் கிடைத்திருந்த வட்டித் தெகை |
| நானாவித வருமானம் | 160.61 | விபரமான பட்டோலைகளும் வருமான மூலமும் |
| பிரமாண அடிப்படை மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம் - மாகாண பேரவை செயலகம் | 198.12 | கொள்வனவு செய்யப்பட்ட பொருள் விபரங்களும் விநியோகப்பட்டியலும் |
| கொள்வனவிற்கான கொடுப்பனவுகள் | 8.23 | மூலப் பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், இயந்திரப் பொறியியலாளரின் சான்றிதழ்கள், பொருள் பெறுவனவுப் பத்திரங்கள், பங்குபற்றியோர் பட்டியல்கள், பணம்பெறுநர் கையொப்பங்கள், கிரயப் பட்டியல்கள், இருப்புச் சான்றிதழ்கள், வேலை பூரணப்படுத்தல் சான்றிதழ்கள் போன்றன. |

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு | அவசரகால நிதியமொன்று கடந்த 03 ஆண்டுகளாக தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | பருவகால ஊழியர்களிற்கான ரூபா 40,000 ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகை விவசாயத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வட மாகாண நிதி ஒழுங்குவிதிகள் | |
| | (i) ஒழுங்குவிதி 106 | மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றால் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 2.31 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) ஒழுங்குவிதி 107 | பாடசாலை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றால் சான்றுறுதிப்படுத்தப்படாது ரூபா 1.41 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது |
| | (iii) ஒழுங்குவிதி 159 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பிரதான பொறியியலாளர் அலுவலகங்களில் வரையப்பட்டிருந்த ரூபா 10.62 மில்லியன் பெறுமதியுடைய 17 காசோலைகள் வழங்கப்படாது வைக்கப்பட்டிருந்தன. |
| | (iv) ஒழுங்குவிதி 274.2 | விதைகள் உற்பத்திப் பண்ணை மற்றும் தெங்கு உற்பத்திப் பண்ணை ஆகியவற்றால் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) ஒழுங்குவிதி 407 | 03 மாகாண திணைக்களங்களினால் காசு மற்றும் களஞ்சியங்களிற்கு நிர்வாக ரீதியாக பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை முறிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 110 | வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இயந்திரவியல் பிரிவினால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 510 | கால்நடை பண்ணையிலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 30,000 தொகையான தேறிய இலாபம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத் தினால் மீளாய்வாண்டில் வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2017 நவம்பர் 16 ஆந் திகதிய 42/2017 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 7.9 ஆம் பிரிவு. | (i) பாடசாலையொன்றின் அதிபரினால் 412 சீருடை கூப்பன்கள் சீருடைகளைத் தைப்பதற்காக நேரடியாக 02 தையல் நிலையங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.<br>(ii) இரண்டு பாடசாலைகளின் அதிபர்களினால் 816 சப்பாத்துக் கூப்பன்கள் நேரடியாக வழங்குனர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. |

## 3. வருமான முகாமைத்துவம்

கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டிலும் முன்னைய 04 ஆண்டுகளிலும் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் பாதீடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வரி வருமானம் | | வரியல்லாத வருமானம் | |
|---|---|---|---|---|
| | பாதிடப்பட்ட | உள்ளபடியான | பாதிடப்பட்ட | உள்ளபடியான |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2013 | 1,900.00 | 1,410.33 | 188.00 | 121.88 |
| 2014 | 1,809.00 | 1,754.66 | 140.00 | 111.80 |
| 2015 | 2,225.30 | 2,074.51 | 97.70 | 157.36 |
| 2016 | 2,273.00 | 2,744.99 | 157.00 | 370.20 |
| 2017 | 3,300.70 | 3,125.54 | 177.00 | 458.08 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

34 உள்ளூராட்சி அதிகாரசபைகளுடன் தொடர்புடைய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,637.22 மில்லியன் கூட்டுத்தொகையான முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணம், வீதி வரிகள், குத்தகை வாடகை, ஆதன வரி போன்ற நிலுவை வருமானம் 01 முதல் 05 ஆண்டு காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 23.18 மில்லியன் பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 2,668.29 மில்லியன் மிகையினை விளைந்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 2,691.47 மில்லியன் முன்னேற்றத்தைதக் காண்பித்தது. அரசாங்க மானியம் ரூபா 2,734.15 மில்லியனாலும் வரி வருமானம் ரூபா 227.60 மில்லியனாலும் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் மொத்தச் செலவினம் ரூபா 24,044.82 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 20,990 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அது மொத்தச் செலவினத்தில் 87 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தில் ரூபா 15,942 மில்லியன் ஆளனி வேதனங்களிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 76 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினம் ரூபா 19,312 மில்லியன் அல்லது மொத்தச் செலவினத்தில் 82 சதவீதமாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமானம் | திசெம்பர் 31<br>2017 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | முரண் {சாதகம்/ (பாதகம்} | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | முரண் {சாதகம்/ (பாதகம்} |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரி மற்றும் வரியல்லாத வருமானம் | 3,478 | 3,584 | 106 | 2,430 | 3,115 | 685 |
| அரசாங்க மானியம் | 23,853 | 23,130 | (723) | 22,912 | 20,415 | (2,497) |
| **மொத்த வருமானம்** | **27,331** | **26,714** | **(617)** | **25,342** | **23,530** | **(1,812)** |

| மீண்டெழும் செலவினம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அளனி வேதனம் | 15,863 | 15,942 | (79) | 14,818 | 14,807 | 11 |
| ஏனையவை | 4,712 | 5,048 | (336) | 4,548 | 4,505 | 43 |
| உப மொத்தம் | 20,575 | 20,990 | (415) | 19,366 | 19,312 | 54 |
| மூலதனச் செலவினம் | 6,776 | 3,055 | 3,721 | 6,184 | 4,241 | 1,943 |
| **மொத்தச் செலவினம்** | **27,351** | **24,045** | **3,306** | **25,550** | **23,553** | **1,997** |

## 5. வர்த்தக முற்பணக் கணக்குகள் மீதான கருத்துரைகள்

### 5.1 கால்நடைப் பண்ணை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறான 22 பசுக்களினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 41 பசுக்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) அனிச்சக்குளம் இனவிருத்திப் பண்ணையின் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்ட 16 இயந்திரங்களும் உபகரணங்ளும் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அச்சுவேலி பண்ணையின் ரூபா 168,745 தொகையான இறுதி இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான இலாபமும் ரூபா 168,745 ஆல் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 இயந்திரவியல் பிரிவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 யூலை 13 இற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள், நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்வதற்குப் பதிலாக பல்வேறுபட்ட பெறுமானத்தேய்வு முறைகளைப் பிரயோகித்து பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன.

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்காக முறையே 5 சதவீதம் மற்றும் 12.5 சதவீதத்தில் நேர்கோட்டு முறையின் அடிப்படையில் ரூபா 150.82 மில்லியன் கூட்டுத்தொகையான 13 இயந்திரங்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 26.39 மில்லியன் திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. அத்துடன், திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாட்டிற்கு செய்யப்பட்டிருந்த இச்சீராக்கம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

## 6.1 செயலாற்றல்

### நிதிகளைப் பயன்படுத்துதல்

மாகாண சபையின் பல்வேறு அபிவிருத்தி வேலைகளிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள் மற்றும் அதன் மீதான உள்ளபடியான செலவினம் என்பன கீழே தரப்படுகின்றன.

| மானியம்/செயற்திட்டத்தின் விபரம் | ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் | 4,147.28 | 3,620.50 | 526.78 |
| கருதுகோள் அடிப்படையிலமைந்த மானியம் | 589.20 | 589.20 | - |
| அறிவுக் களஞ்சியத் தளத்திலான பாடசாலைக் கல்வி பரிமாற்றம் | 315.00 | 252.00 | 63.00 |
| சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் | 360.00 | 360.00 | - |
| கைதடி கட்டிட நிர்மாணம் | 16.50 | 16.50 | - |
| வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் | 212.31 | 207.16 | 5.15 |
| வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (மேலதிக நிதியீட்டம்) | 536.42 | 174.01 | 362.41 |
| இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் | 1,077.00 | 685.37 | 391.63 |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புச் செயற்திட்டம் | 909.00 | 809.00 | 100.00 |
| **மொத்தம்** | **8,162.71** | **6,713.74** | **1,448.97** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டவாறு பாதீட்டு வழிகாட்டல்கள், மாகாண நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் மாகாண தேவைப்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது பாதீட்டு பிரேரணைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆகையால், மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 23 செலவினத் தலைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,448.97 மில்லியன் நிதி ஏற்பாடு உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருகக்வில்லை.

(ஆ) பாதீட்டு மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகளின்றி 04 திணைக்களங்களினால் ரூபா 132.22 மில்லியன் கூட்டுத்தொகையான மூலதனச் செலவினம் செய்யப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, இச்செலவினம் மிகைஅறவீட்டு கணக்கின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(இ) எழுமாந்த அடிப்படையில் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக 163 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,212.37 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள், 02 அமைச்சுக்கள் மற்றும் 10 திணைக்களங்களினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

காசோலை அடியிதழ்களின் படி, பல்வேறு வழங்குநர்களின் பெயர்களில் ரூபா 718,000 பெறுமதியான 27 காசோலைகள் வரையப்பட்டிருந்தன. இருப்பினும், இரண்டு பாடசாலைகளின் இரண்டு ஆசிரியர்கள் மற்றும் ஒரு ஆசிரியையின் கணவரால் இக்காசோலைகள் காசாக்கப்பட்டிருந்தன.

### 6.3 வெளிப்படையான முறையீனங்கள்

பாடசாலையொன்றின் சிற்றுண்டிச் சாலை, முறையான கொள்வனவு வழிகாட்ல்கள் பின்பற்றப்படாது அதிபரினால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 சனவரி முதல் 2018 யூன் வரையான காலத்திற்கு பெறப்பட்ட ரூபா 43,100 வாடகை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 6.4 முகாமைத்துவ பலவீனங்கள்

மன்னார் வலயக் கல்விப் பிரிவிற்குரிய 266 ஆசிரியர்கள் வடமேல் மாகாணத்திற்கு (புத்தளம் மாவட்டம்) இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், வட மாகாணத்தின் மாகாண கல்வித் திணக்களம் மீளாய்வாண்டில் ரூபா 82.86 மில்லியன் தொகையான சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்தியிருந்ததுடன் அத்தொகையினை குறித்த தரப்பினரிடமிருந்து மீள்நிரப்புவதற்கு 2018 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. .

### 6.5 மேலதிகக் கொடுப்பனவுகள்

உள்ளபடியாக செய்யப்பட்ட வேலைகளை கொடுப்பனவுப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட வேலைகளுடன் ஒப்பிடுகையில் ஒரு அமைச்சு, 04 திணைக்களங்கள் மற்றும் 04 பாடசாலைகளினால் 14 நிர்மாண வேலைகள் தொடர்பில் ரூபா 1,053,000 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**6.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------

**6.6.1 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு அமைச்சு, 07 திணைக்களங்கள் மற்றும் 15 உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்குச் சொந்தமான ரூபா 477.877 மில்லியன் தொகையான பௌதீக சொத்துக்கள் 10 மாதங்கள் முதல் 09 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பயன்படுத்தப்படாது அல்லது குறைப்பயன்பாட்டில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

(ஆ) வட மாகாணத்திலுள்ள 56 பாடசாலைகள் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டிருந்த போதிலும், அந்தப் பாடசாலைகளிற்குரிய காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் போன்றன 05 ஆண்டுகளிற்கும் மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6.6.2 களஞ்சிய விடயங்களின் வருடாந்த மெய்மையாய்வு**

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 212.35 மில்லியன் தொகையான 22 சொத்துக்களின் பெறுமதி, பொருள் மெய்மையாய்வுச் சபையினால் மீளாய்வாண்டின் போது பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 396 பற்றாக்குறைக் கைத்தறி விடயங்களின் பெறுமதி, முறையான அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டின் போது கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) வட மாகாண சபையின் உறுப்பினர்களிற்கு அவர்களது தனிப்பட்ட பாவனைக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 16.25 மில்லியன் பெறுமதியுடைய உபகரணங்கள் பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6.6.3 கைத்தறி நிலையங்களிற்கு உரித்தற்ற ஆதனங்கள்**

--------------------------------------------------------------------------------

கைத்தறி நிலையங்களால் 17 ஆதனங்கள் பயன்படுத்தப்பட்டிரந்த போதிலும், அந்த ஆதனங்களின் உரிமைத்துவம் கடந்த ஐந்து ஆண்டுகளாக அந்த நிலையங்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**6.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த 10 ஆண்டுகளாக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 39.316 மில்லியன் பெறுமதியுடைய 19 விடயங்களின் இழப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 16.48 மில்லியன் பெறுமதியான காலாவதியான மருந்துகள் யாழ்ப்பாண வலய மருத்துவ வழங்கல் பிரிவுகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) பார வாகனங்களிற்கான சாரதி அனுமதிப்பத்திரமற்ற சாரதியொருவர் 2017 மார்ச் 28 ஆந் திகதி விபத்தில் சிக்கியிருந்தார். அதன் விளைவாக, கிளிநொச்சி வலயச் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு ரூபா 1.54 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) கிளிநொச்சி வலயச் சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் ரூபா 4.29 மில்லியன் செலவிட்டு மீளாய்வாண்டில் விபத்தில் சிக்குண்ட வாகனமொன்று திருத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 18 மாதங்களிற்கும் மேற்பட்ட காலமாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாணப் பிரதான செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்படாது ரூபா 184,000 பெறுமதியான கால்நடை இருப்புக்களின் நட்டம் கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 07 இருப்பு விடயங்களின் நட்டப் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருந்த போதிலும், இந்த நட்டங்கள் தொடர்பில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் கடந்த 10 ஆண்டுகளிற்கும் மேலாக அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஒப்பந்த காரரால் பூரணப்படத்தப்படாதிருந்த இரண்டு பாடசாலைக் கட்டிடங்களின் வேலைகளை பூரணப்படுத்துவதற்காக விலைமனுக்கள் மீளக் கோரப்பட்டமை காரணமாக ரூபா 2.23 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

**6.8 செயற்திட்டங்களைப் பூரணப்படுத்துவதிலுள்ள தாமதங்கள்**

34 நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துவதில் காணப்பட்ட தாமதத்திற்காக ரூபா 53.13 மில்லியன் கூட்டுத்தொகையான தாமதக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒப்பந்த காரரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**6.9 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

மூன்று பாடசாலைகளுடன் தொடர்புடைய ரூபா 32.66 மில்லியன் கூட்டுத்தொகையான மூலதன வேலைகள் பல்வேறு காரணங்களால் மீளாய்வாண்டில் கைவிடப்பட்டிருந்தன.

**6.10 மூலதன வேலைகளை மேற்கொள்வதில் தாமதங்கள்**

ரூபா 394.09 மில்லியன் மொத்தப் பெறுமதியுடைய 37 மூலதன வேலைகளிற்காக காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், காலநீடிப்புத் திகதி முடிவடைந்த பின்னர் 2018 யூன் 21 இல் உள்ளவாறு அந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6.11 மனித வள முகாமைத்துவம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**6.11.1 பாடசாலை பதிவியணியினர்**

| மாவட்டம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | | உள்ளபடியான பதவியணி | | வெற்றிடங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | அதிபர் | ஆசிரியர் | அதிபர் | ஆசிரியர் | அதிபர் | ஆசிரியர் |
| யாழ்ப்பாணம் | 551 | 8,839 | 524 | 7,881 | 27 | 958 |
| கிளிநொச்சி | 147 | 2,294 | 92 | 1,871 | 55 | 423 |
| மன்னார் | 158 | 2,258 | 92 | 1,778 | 66 | 480 |
| வவுனியா | 215 | 2,770 | 194 | 2,330 | 21 | 440 |
| முல்லைதீவு | 149 | 2,277 | 90 | 1,820 | 59 | 457 |
| மொத்தம் | **1,220** | **18,438** | **992** | **15,680** | **228** | **2,758** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐந்து மாவட்டங்களில் நிலவுகின்ற 2,758 ஆசிரியர்கள் மற்றுறம் 228 அதிபர்களிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.11.2 சுகாதாரத்துறை பதவியணியினர்**

---

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (PDHS) மற்றும் வலயச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களில் (RDHS) சுகாதார உத்தியோகத்தர்களின் மேலதிகம் மற்றும் பற்றாக்குறைகள் காணப்பட்டன. இருப்பினும், மாகாணத்தில் காணப்படுகின்ற மேலதிக பதவியணியிரைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ ஆலோசகர்களிற்கான 119 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பில் தற்போது 63 மருத்துவ ஆலோசகர்களே மாகாணத்தில் சேவையாற்றி வருவதுடன், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைதீவு மாவட்டங்களிலுள்ள அநேக வைத்தியசாலைகளில் மருத்துவ ஆலோசகர்களிற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

(ஆ) மருத்துவ உத்தியோகத்தர்களிற்கான 723 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பில் தற்போது 600 மருத்துவ உத்தியோகத்தர்கள் மாத்திரமே சேவையாற்றி வருகின்றனர். அதன் காரணமாக, பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகள் மருத்துவ உத்தியோகத்தர்களின்றி இயங்கிவருகின்றன.

(இ) பிரதான வைத்தியசாலைகளில் அதிக எண்ணிக்கையிலான தாதி உத்தியோகத்தர்களிற்கான வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. 826 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் 716 தாதி உத்தியோகத்தர்கள் மாத்திரமே மாகாணத்தில் சேவையாற்றுகின்றனர்.

(ஈ) பற்சிகிச்சை உத்தியோகத்தர்களிற்கான 92 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பில் தற்போது 65 பற்சிகிச்சை உத்தியோகத்தர்கள் மாத்திரமே சேவையாற்றி வருகின்றனர். அதன் காரணமாக, மாகாணத்திலுள்ள 17 வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை.

**6.12 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**6.12.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

**(அ) மாகானண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள்**

---

மாகானண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஏனைய கணக்குகளை கணக்காய்விற்காகச் சமர்ப்பித்தல்**

---

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் செயன்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

|  | 2017 ஆம் ஆண்டிற்காக |  |
|---|---|---|
| கணக்குகளின் வகை | கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை |
| ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 33 | 33 |
| வருமானக் கணக்கு | 01 | 01 |
| அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் | 32 | 32 |
| வர்த்தக முற்பணக் கணக்கு | 04 | 04 |
| நிதியக் கணக்கு | 01 | 01 |
|  | 71 | 71 |

**6.12.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

பிரதான செயலாளரின் செயலகம் மற்றும் கல்வி, கலாச்சார அலுவல்கள், விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு 02 ஆண்டுகளிற்கும் மேலாக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.12.3 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த தீர்வு காணப்படாத விடயங்கள்**

| ஆண்டு | பந்தி இல. | கணக்காய்வு அவதானிப்புகள் |
|---|---|---|
| 2016 | 6.1(ஆ) | காற்று விசிரிகளை பொருத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பொறியினை தாபித்தல். |
| 2016 | 6.4 | வவுனியா பூந்தோட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமாக கட்டிடமொன்று காணப்பட்ட போதிலும், கடந்த 7 ஆண்டுகளாக ரூபா 2.7 மில்லியன் தொகை வாடகைக்கு செலவிடப்பட்டிருந்தமை. |
| 2016 | 6.5 (v) | வரிசை அமைச்சுக்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களினால் அன்பளிப்பச் செய்யப்பட்டிருந்த அநேக வாகனங்களின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு மாகாண சபையினால் அர்த்தமள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை. |
| 2016 | 6.10.2(iv) | ஒப்பந்தகாரரின் பெறுமதிசேர் வரிப் பதிவு இலக்கத்தின் செல்லுபடித் தன்மையினை உறுதிப்படுத்தாது சிவில் வேலைகளிற்காக பிரதேச சபையினால் ரூபா 3.16 மில்லியன் பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தமை. அதன்பின்னர் அந்த பதிவு இலக்கம் செல்லுபடியற்றது என்பது வெளிப்பட்டிருந்தது. |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| (அ) ஒப்பந்த நிர்வாகம் | இலக்கிடப்பட்ட காலத்தில் பூரணப்படுத்தப்படாமை. |
| (ஆ) மனித வள முகாமைத்துவம் | ஆளனியை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | அநேக கட்டிடங்களும் இயந்திரங்களும் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை. |
| (ஈ) பாதீடு | பலவீனமான நிதிக் கட்டுப்பாடு |